# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2220 - 2021 මාර්තු මස 19 වැනි සිකුරාදා - 2021.03.19

*2220 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 582 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 588 |


**கவனிக்க.-** (i) நிதி முகாமைத்துவ (பொறுப்பு) (திருத்தம்) சட்டமூலம் 2021, மாச்சு மாதம் 05 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறை நிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(ii) வேலையாளர்களின் தேசிய குறைந்தபட்ச வேதனம் (திருத்தம்) சட்டமூலம் 2021, மாச்சு மாதம் 05 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறை நிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலூன பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2021, ஏப்பிறல் மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2021, மாச்சு மாதம் 26 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


579-B 82214-5,403 (2021/ 03)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

*1.* **வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

*1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.*

*1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).*

*1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.*

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

*2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.*

*2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.*

*அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.*

*2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலுவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.*

***3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :***

*3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-*

*3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.*

*3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.*

*3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.*

*3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.*

*3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.*

*3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.*

*3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.*

*3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.*

***4. பணிக்கமர்த்தும் நியதிகள் :***

*4.1 நிரந்தரமானதும் ஒய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஒய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.*

*4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.*

*4.3 அரசாங்க சேவையில் ஒய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஒய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஒய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.*

*4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஒய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஒய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஒய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஒய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.*

***5. யுத்த சேவைச் சலுகை :***

*5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.*

***6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :***

*6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.*

*6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.*

*6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.*

*6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.*

*6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

***7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :***

*7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.*

***8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :***

*இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.*

# பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.*

*1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.*

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனக்ருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
   (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
   (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
   (III) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
      (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
      (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
   (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
   (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
   (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
   (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
   (vIII) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
   (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
   (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
   (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
   (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
   (xIII) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம்

*விளையாட்டு உத்தியோகத்தர்களின் இணைந்த சேவையின் கண்காணிப்பு முகாமைத்துவ உதவியாளர்-தொழில்நுட்ப சேவை வகுதி - தரம் III விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் பதவிக்கு மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பு - 2021*

விளையாட்டு உத்தியோகத்தர்களின் இணைந்த சேவையின் கண்காணிப்பு முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்ப சேவை வகுதியின் விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் பதவிகளில் காணப்படும் 13 வெற்றிடங்கள் தொடர்பாக மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பின் கீழ், மத்திய அரசாங்க மற்றும் மாகாண அரசாங்க சேவைகளில் கடமையாற்றும் இங்கு கீழே தரப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்திசெய்யும் விளையாட்டு உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. **தகைமைகள்.-**

1.1 **கல்வி மற்றும் ஏனைய தகைமைகள்:-**

(அ)

I. இரு தடவைகளுக்கு மேற்படாது சிங்களம் / தமிழ் மொழி மற்றும் கணிதம் / எண்கணிதம் / வணிக எண்கணிதம் உள்ளடங்களாக 06 பாடங்கள் கொண்ட கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரம்) பரீட்சை:

அல்லது

II. அதற்குச் சமானமான அல்லது உயர் பரீட்சை ஒன்றில் சித்தியடைந்திருத்தல்

அத்துடன்

III. ஏற்றுக்கொள்ளப்பட்ட விளையாட்டு /உடற்கல்வி தொடர்பான கல்லூாரி ஒன்றில் ஆகக் குறைந்தது 06 மாத பாடநெறி ஒன்றினை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

IV. இராணுவம், கடற்படை, விமானப்படை பயிற்சிப் பாடசாலை ஒன்றில், விளையாட்டு /உடற்கல்வி தொடர்பாக ஏற்றுக்கொள்ளப்பட்ட 06 மாத பாடநெறி ஒன்றினை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

V. பாடசாலையொன்றில் விளையாட்டு ஆசிரியராக /ஆசிரியையாக அல்லது உள்ளூராட்சி நிறுவனம் ஒன்றில் விளையாட்டு ஆலோசகராக ஆகக் குறைந்தது 05 வருட அனுபவத்தினைக் கொண்டிருத்தல்.

அல்லது

VI. யாதேனும் விடயம் ஒன்றில் அகில இலங்கை அணியொன்றின் அங்கத்தவராக சர்வதேசப் போட்டியொன்றில் பங்குபற்றியிருத்தல்.

அல்லது

VII. விளையாட்டு அமைச்சினால் நடாத்தப்படும் தேசிய விளையாட்டுப் பெருவிழாவொன்றில் மாவட்ட மட்டத்தில் 1, 2 ஆம் இடங்களைப் பெற்றிருத்தல் அல்லது தேசிய விளையாட்டுச் சங்கமொன்றினால் நடாத்தப்படும் தேசிய மட்டப் போட்டிகளில் 1, 2, 3 ஆம் இடங்களைப் பெற்றிருத்தல்

VII. நன்னடத்தையுடைய மற்றும் உடலியல் ரீதியாக திடமானவராக இருத்தல் வேண்டும்.

1.2. **தொழில் தகைமைகள் :**

I. விளையாட்டுச் சட்டத்தின் கீழ் ஏற்புடைய துறைக்கு உரித்தான விளையாட்டுக் கட்டுப்பாட்டுச் சபையால் விநியோகிக்கப்பட்ட பயிற்றுவிப்பாளர்களின் அனுமதிப்பத்திரம் ஒன்றினை பெற்றிருத்தல்:

அல்லது

II. ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனம் ஒன்றில் பயிற்றுவிப்பாளர் தொடர்பான விளையாட்டு டிப்ளோமா சான்றிதழ் ஒன்றினைப் பெற்றிருத்தல் மற்றும் சர்வதேசப் போட்டிகளின் போது இலங்கையினைப் பிரதிநிதித்துவப்படுத்திய வீரராயிருத்தல்,

அத்துடன்

III. விளையாட்டு அமைச்சின் விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தில் மற்றும் மாகாண அரசாங்க சேவையில் விளையாட்டுத்துறையின் உத்தியோகத்தர் ஒருவராக அல்லது விளையாட்டு உத்தியோகத்தர்களின் இணைந்த சேவையின் வகுப்பு IV தரம் II இல், பத்து வருட திருப்திகரமான சேவையினை பூர்த்தி செய்திருத்தல்.

**குறிப்பு** - இப் பதவியின் பொருட்டு விளையாட்டு உத்தியோகத்தர்களின் இணைந்த சேவையில் தகைமைகளைக் கொண்ட உத்தியோகத்தர்கள் இல்லாதவிடத்து மாகாண அரசாங்க சேவையின் உத்தியோகத்தர்களை சேர்த்துக் கொள்ளுவதா என்பது பற்றி இறுதித் தீர்மானத்தினை மேற்கொள்ளும் அதிகாரம் விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினைச் சார்ந்ததாகும்.

**குறிப்பு** – (ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனம் தொடர்பான வரைவிலக்கணம்) – "ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனம்" என்பதனால் கருதப்படுவது, விளையாட்டு அமைச்சினால் ஏற்றுக்கொள்ளப்படும் விளையாட்டு தொடர்பான கல்வி நிறுவனமொன்றாகும். இது தொடர்பாக தீர்மானத்தினை மேற்கொள்ளும் போது அந் நிறுவனத்தின் பாடவிதானம், நேர அட்டவணை மற்றும் தகைமைகள் தொடர்பாக அமைச்சு விளிப்புடன் இருக்க வேண்டியதுடன், டிப்ளோமா சான்றிதழின் காலவரையறை ஆகக் குறைந்தது 06 மாதங்களாகவாவது இருத்தல் வேண்டும்.

1.3 **அனுபவம்** :

(அ) மத்திய அரசாங்க சேவையிலுள்ள விளையாட்டு உத்தியோகத்தர்கள் தொடர்பாக, விளையாட்டு உத்தியோகத்தர் பதவியில் பத்து வருடங்கள் (10) செயற்பாடு மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தினைப் பூர்த்திசெய்துள்ள அத்துடன் சம்பள உயர்வுகள் பத்தினை (10) சம்பாதித்துள்ள விளையாட்டு உத்தியோகத்தர் ஒருவராக இருத்தல்.

(ஆ) மாகாண அரசாங்க சேவையிலுள்ள விளையாட்டு உத்தியோகத்தர்கள் தொடர்பாக, விளையாட்டுத்துறைக்கு ஏற்புடைய விளையாட்டு உத்தியோகத்தர் பதவிக்குச் சமானமான பதவியொன்றில் ஆகக் குறைந்தது பத்து வருடங்கள் (10) செயற்பாடு மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தினைப் பூர்த்திசெய்துள்ள மாகாண அரசாங்க சேவையில் நிரந்தரமாக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவராக இருத்தல்.

1.4 **உடற் தகைமைகள்**: அனைத்து அபேட்சகர்களும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும், பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமானளவு உடல் மற்றும் உளத் திடத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**குறிப்பு**.- முதலாவதாக நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை தொடர்பாக மத்திய அரசாங்க சேவையிலுள்ள விளையாட்டு உத்தியோகத்தர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர். அவ்வாறு மத்திய அரசாங்க சேவையிலுள்ள விளையாட்டு உத்தியோகத்தர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டதன் பின்னர் இன்னும் வெற்றிடங்கள் நிலவுமாயின் மாத்திரம் மாகாண அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களிலிருந்து மட்டுப்படுத்தப்பட்ட அளவின் கீழ், கொண்டுள்ள தகைமைகளுக்கு ஏற்ப எஞ்சிய வெற்றிட எண்ணிக்கை தொடர்பாக ஆட்சேர்ப்புச் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

1.5 **ஏனைய தகைமைகள்**:

I. பதவி நிரந்தரமாக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

II. அங்கீகரிக்கப்பட்ட செயற்சாதனை மதிப்பீட்டு செயன்முறையின் பிரகாரம் தகைமைகளைப் பரீட்சிக்கும் தினத்திற்கு முன்னுள்ள பத்து (10) வருடங்களினுள் திருப்திகரமான மட்டத்தில் அல்லது அதனைவிட உயர்வான செயற்சாதனையினை வெளிக்காட்டியிருத்தல்.

III. அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு ஏற்ப ஒழுக்காற்றுத் தண்டனையொன்றினைப் பெற்றிராது இருத்தல்.

IV. ஏற்புடைய மட்டத்தில் மற்ற அரசகரும மொழித்திறன் தேர்ச்சியினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

V. குறிப்பிட்ட வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

VI. விண்ணப்பப்படிவத்தினைக் கோரும் அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட தினத்திற்கு 1 இன் கீழ் காட்டப்பட்டுள்ள சகல தகைமைகளையும் அனைத்து விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

1.6. **வயது**: ஏற்புடையதாகாது.

1.7. **ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும் முறை** :

1.7.1. *எழுத்துமூலப்பரீட்சை*: ஏற்புடையதாகாது.

1.7.2. *தொழில்சார் சோதனை*: ஏற்புடையதாகாது.

1.7.3. *தராதரங்களை மதிப்பீடு செய்யும் நேர்முகப் பரீட்சை*:
தராதரங்களை மதிப்பீடு செய்யும் நேர்முகப் பரீட்சை:

| *புள்ளி வழங்கும் பிரதான தலைப்புகள்* | *உச்சளவுப் புள்ளி அளவு* | *தெரிவுசெய்யப்படுவதற்கு கவனத்திற் கொள்ளப்படும் ஆகக் குறைந்த புள்ளி அளவு* |
|---|---|---|
| மேலதிக சேவை அனுபவம் | 30 | ஏற்புடையதாகாது |
| மேலதிக கல்வித்தகைமைகள் மற்றும் தொழிற் தகைமைகள் | 25 | |
| விளையாட்டு உத்தியோகத்தர் பதவியில் வெளிக்காட்டப்பட்ட ஆற்றுகைகள் | 20 | |
| விளையாட்டுக்களைப் பயிற்றுவித்தல், போட்டி மத்தியத்துவம் / போட்டி ஒழுங்கமைப்பு தொடர்பான மேலதிக அனுபவங்கள் | 20 | |
| நேர்முகப் பரீட்சையின் போது வெளிக்காட்டும் திறன்கள் | 05 | |
| **மொத்தம்** | 100 | |

- விளையாட்டு உத்தியோகத்தர்களின் இணைந்த சேவையின் விளையாட்டு உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட போது சமர்ப்பிக்கப்பட்ட சான்றிதழ்கள் தொடர்பாகப் புள்ளிகள் மீண்டும் வழங்கப்பட மாட்டாது.
- தகைமைகளைப் பரிசோதித்தல் தராதரங்களை மதிப்பீடு செய்யும் நேர்முகப் பரீட்சையின் போதே மேற்கொள்ளப்படும்.

**குறிப்பு**.-

1. மேலே அட்டவணையில் காட்டப்பட்டுள்ள புள்ளிகள் வழங்கப்படும் பிரதான துறைகள் தொடர்பாக ஒதுக்கப்பட்டுள்ள உச்சளவு புள்ளி அளவுகள் உள்ளடங்கிய ஒவ்வொரு தராதரத்தினையும் மதிப்பீடு செய்யும் நேர்முகப் பரீட்சை தொடர்பாக விரிவான புள்ளித் திட்டமொன்றிற்கு அனுமதியளித்தல் நியமனஞ் செய்யும் அதிகாரியால் மேற்கொள்ளப்படும்.

2. தராதரங்களை மதிப்பீடு செய்யும் நேர்முகப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் மொத்தப் புள்ளிகளின் ஆற்றுகை ஒழுங்கு வரிசையின்படி மற்றும் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப விண்ணப்பதாரிகள் விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் கண்காணிப்பு முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப சேவையின் தரம் III விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் பதவிக்கு சேர்த்துக் கொள்ளப்படுவர்.

2. **மாதாந்த சம்பள அளவுத் திட்டம்**.- 2016.02.25 திகதிய இலக்கம் 03/2016 கொண்ட பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் அட்டவணை I இன் பிரகாரம் இப் பதவிக்குரிய மாதாந்த சம்பளம் ரூபா 31,040 - 10 × 445 - 11 × 660 - 10 × 730 - 10 × 750 - ரூபா 57,550 (MN-3-2016) ஆகும். தங்களுக்கான சம்பளமானது அச்சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைய அதன் அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கொடுப்பனவு செய்யப்படும். இதற்கு மேலதிகமாக அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு அரசாங்கத்தினால் காலத்திற்கு காலம் வழங்கப்படும் வேறு கொடுப்பனவுகளும் தங்களுக்கு உரித்துடையதாக அமையப் பெறும்.

3. **விண்ணப்பப் படிவத்தினை அனுப்ப வேண்டிய முறை**.-

3.1 விண்ணப்பதாரிகளால் இவ் அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி படிவத்திற்கு ஏற்ப பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை நிறுவனத் தலைவரின் ஊடாக 2021.04.20 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கீழ்வரும் முகவரிக்கு கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். குறிப்பிட்ட தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் மற்றும் முழுமைப்படுத்தப்படாத விண்ணப்பப்படிவங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

3.2 விண்ணப்பப் படிவத்தினை அனுப்ப வேண்டிய முகவரி :
பணிப்பாளர் நாயகம், விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம்,
இலக்கம் 09, பிலிப் குணவர்த்தன மாவத்தை,
கொழும்பு 07.

3.3 விண்ணப்பப் படிவத்தினை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "விளையாட்டு உத்தியோகத்தர்களின் இணைந்த சேவையின் கண்காணிப்பு முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்ப சேவை வகுதியின் விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு - 2021" எனத் தெளிவாக எழுதப்படுதல் வேண்டும்.

3.4. மாகாண அரசாங்க சேவையின் விளையாட்டு உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பப் படிவங்களை மாகாண விளையாட்டு அமைச்சின் செயலாளரின் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

4. சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளின் வாயிலாக பிரிசுரிக்கப்படும் இவ் அறிவித்தலில் மொழிப் பதங்கள் தொடர்பாக யாதேனும் பொருத்தப்பாடின்மை அல்லது அநுகூலத்தன்மை உள்ளதென காணக் கிடைக்குமாயின் அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி அறிவித்தலின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**5. சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள்**

5.1 இப் பதவி நிரந்தரமானதுடன் ஓய்வூதியச் சம்பளத்தினைக் கொண்டதாகும். ஓய்வூதியச் சம்பள முறைமை தொடர்பாக அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கையளவிலான தீர்மானங்களுக்குக் கட்டுப்படுதல் வேண்டும்.

**5.2 சேவை நிபந்தனைகள்**

சகல நியமனங்கள் சம்மந்தமாகவும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் இலக்கம் 1589/30 மற்றும் 2009.02.20 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடவடிக்கைமுறை விதிகளில் காட்டப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும் மற்றும் தாபனக் கோவையின் ஏற்பாடுகளுக்கும் ஏற்புடையதாகும்.

6. தமது அறிவுக்கு எட்டிய வகையில் சமர்ப்பிக்கப்பட்ட யாதேனும் தகவல்கள் உண்மைக்குப் புறம்பானவை என தெரியவருமாயின் அல்லது விண்ணப்பதாரி வேண்டுமென்றே யாதேனும் முக்கியமான விடயமொன்றை மூடிமறைத்துள்ளமை தெரியவருமாயின் அவ்வாறு இல்லாவிடின் தகைமையின்மை சேவை புரியும் காலத்தின் யாதேனும் சந்தர்ப்பம் ஒன்றில் நிரூபிக்கப்படுமாயின் அவர் சேவையில் பதவியிறக்கப்படுவதற்கு உடன்படுவர்.

அமல் எதிரிசூரிய,
பணிப்பாளர் நாயகம்,
விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம்,

2021, மாச்ச 19.

இலக்கம் 09, பிலிப் குணவர்த்தன மாவத்தை,
கொழும்பு 07.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம்**

விளையாட்டு உத்தியோகத்தர்களின் இணைந்த சேவையின் கண்காணிப்பு முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்ப சேவை வகுதி தரம் III விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் பதவிக்கு மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பு

| | |
|---|---|
| மத்திய அரசாங்கம் | |
| மாகாண அரசாங்கம் | |

(இதில் தங்களுக்கு உரித்தான சேவையின் முன்னால் " ✓" இடுக).

01. முழுப்பெயர் :..............................................................................................................................

..............................................................................................................................

02.

(அ). முதலெழுத்துக்களுடன் பெயர் : உதா:-(GUNAWARDANAM.G.B.S.K) (ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களால் நிரப்பப்படுதல் வேண்டும்)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |

03. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

04. ஆண்/பெண் நிலைமை :.....................................................................................

05. நிரந்தர முகவரி :.....................................................................................

06. அலுவலக முகவரி :.....................................................................................

07. தொலைபேசி இலக்கம் :.....................................................................................

08. வர்த்தமானி அறிவித்தலின் I ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள சகல தகைமைகளும் பூரணப்படுத்தப்பட்டுள்ளதா? .......
.......................................................................................

09. கல்வித் தகைமைகள் :

(அ) க.பொ.த (சா./த.) பரீட்சை

வருடம் :.....................................................................

பரீட்சைச் சுட்டெண் :.............................

| தொடர் இலக்கம் | விடயம் | சித்தி |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

(ஆ) க.பொ.த (உ./த.) பரீட்சை

வருடம் :.................................... பரீட்சைச் சுட்டெண் :-------------------

| தொடர் இலக்கம் | விடயம் | சித்தி |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

10. தொழிற் தகைமைகள் : (ஏற்புடைய சான்றிதழ்களின், சான்றுபடுத்தப்பட்ட நிழற்பிரதிகளை விண்ணப்பப் படிவத்துடன் சமர்ப்பிக்க). ..........................................................................................................
..........................................................................................................................................

11. அனுபவம் : ......................................................................................................................
..........................................................................................................................................

12. தற்போது வகிக்கும் பதவி :.....................................................................................................
..........................................................................................................................................

12.1 அப் பதவி உரித்தாவது மத்திய அரசாங்க சேவைக்கா அல்லது மாகாண அரசாங்க சேவைக்கா எனத் தருக ..........................................................................................

12.2 அப் பதவிக்கு நியமனம் பெற்ற திகதி : ..........................................................................................

12.3 அப் பதவியில் நிரந்தரமாக்கப்பட்ட திகதி :..........................................................................................

12.4 2021.04.20 ஆந் திகதிக்கு சேவைக் காலம், வருடங்கள் :.................. மாதம் :.............. நாட்கள் :................

12.5 தற்போது சேவையாற்றும் நிலையம் :..........................................................................................

13. தாங்கள் யாதேனும் குற்றம் தொடர்பாக நீதிமன்றத்தினால் தண்டனை பெற்றதற்கான அல்லது தற்போது தங்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் நீதிமன்ற நடவடிக்கையானது காணப்படுகின்றதா? ஆம் / இல்லை

13.1 "ஆம்" எனில் விபரத்தினைக் குறிப்பிடவும்.
..........................................................................................................................................
..........................................................................................................................................

14. விண்ணப்பதாரியின் உறுதிமொழி :

(அ) இவ் விண்ணப்பப் படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவை எனவும் மற்றும் சரியானவை எனவும் நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

(ஆ) என்னால் வழங்கப்பட்டுள்ள மேற்படி தகவல்கள் உண்மைக்குப் புறம்பானவை என நிரூபிக்கப்படுமாயின் நான் சேவையில் சேர்த்துக்கொள்ளப்படுவதற்கு தகைமையற்றவராவதுடன், மேலும் நியமனம் வழங்கப்பட்ட பின்னர் அவ்வாறு நிரூபணமாகின் சேவையில் பதவி தாழ்த்தப்படுவதற்கு கட்டுப்பட்டவனாவேன் என்பதனையும் அறிவேன்.

(இ) இங்கு தரப்பட்டுள்ள எந்தவொரு தகவலையும் பின்னர் மாற்றஞ் செய்ய மாட்டேன்.

திகதி :............. .............................,

விண்ணப்பதாரியின் கையொப்பம்.

15. இவ் விண்ணப்பப் படிவத்தினைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ..................................................... மத்திய அரசாங்கத்தின் கீழுள்ள / மாகாண அரசாங்கத்தின் கீழுள்ள ........................../ அமைச்சில் / திணைக்களத்தில் .......................................................... பதவியில் சேவையாற்றுகிறார் எனவும் அவர் மேலே தரப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை எனவும் ..................................... ஆந் திகதிக்கு அண்மித்த 10 வருட செயற்படு சேவைக் காலத்தினுள் செய்த தவறொன்றிற்கு (எச்சரிக்கப்படல் தவிர்ந்த) யாதேனும் விதத்தில் ஒழுக்காற்று நடவடிக்கைத் தண்டனை ஒன்றிற்கு அவர் உள்ளாக்கப்படவில்லை எனவும், அரசாங்க சேவை ஆணைக்குழுச் சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கைத் தண்டனை ஒன்றினைப் பெறவில்லை எனவும் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ளார் எனவும் இப் பதவியின் பொருட்டு தெரிவுசெய்யப்பட்டால் தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியும் / விடுவிக்க முடியாது எனவும் அவர் எனது முன்னிலையில் இவ் விண்ணப்பப்படிவத்தில் கையொப்பமிட்டார் எனவும் இத்தாள் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி :............. .............................,

திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

(பதவி முத்திரை)

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## கால்நடை வளங்கள், பண்ணைகள் மேம்பாடு, பால் மற்றும் முட்டை சார்ந்த கைத்தொழில் இராஜாங்க அமைச்சு

கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம்

## இலங்கை தொழில்நுட்ப சேவையின் III ஆம் தரத்திற்கு தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் - 2021

கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்ப சேவையின் III ஆம் தரத்திற்கு தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சையின் பொருட்டு கால்நடை உற்பத்தி சுகாதார பணிப்பாளர் நாயகத்தினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. **பரீட்சை**.- இப்பரீட்சை 2021, யூன் மாதம் இலங்கை தொழில்நுட்ப சேவைப் பிரமாணத்திற்கு அமைய கால்நடை உற்பத்தி சுகாதார பணிப்பாளர் நாயகத்தினால் பரீட்சை நடாத்தப்படும். இப்பரீட்சையினை ஒத்திப்போடுவதற்கும் அல்லது இரத்துச் செய்வதற்கும் கால்நடை உற்பத்தி சுகாதார பணிப்பாளர் நாயகத்திற்கு அதிகாரம் உண்டு.

3. **சேவை நிபந்தனைகள்**.- அரசாங்க சேவையில் நியமனங்களைக் கட்டுப்படுத்தும் பொது நிபந்தனைகளுக்கும் இங்கு கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இலங்கை தொழில்நுட்ப சேவையின் III ஆம் தரத்திற்கு தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படும் :

(i) நியமனம் பெறும் உத்தியோகத்தர் தீவின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கு உட்படுத்தப்படுவார் என்ற நிபந்தனையின் பேரிலேயே நியமிக்கப்படுவர்.

(ii) இப்பதவி ஓய்வூதியம் உடையதாகும். உமக்கு உரித்தான ஓய்வூதியத்திட்டம் தொடர்பாக அரசாங்கத்தினால் தொடர்ந்தேர்ச்சையாக எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானத்திற்கு தாங்கள் கட்டுப்படுதல் வேண்டும். மேலும், தாங்கள் விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு தபுதாரர்/அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புத் தொகை செலுத்துதல் வேண்டும். அரசாங்கத்தினால் காலத்திற்குக் காலம் விதிக்கப்படும் வகையில் தாங்கள் அது தொடர்பாக பங்களிப்புத் தொகை செலுத்துதல் வேண்டும்.

(iii) திறந்த ஆட்சேர்ப்பு முறையின்கீழ் நியமனம் பெறும் உத்தியோகத்தர்கள் மூன்று வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுதல் வேண்டும். அரசாங்க சேவைப்பதவி ஒன்றில் உறுதிப்படுத்தப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்படுவாரேயாயின் அது தொடர்பில் நியமனமானது ஒரு வருட பதில் கடமை காலப்பகுதிக்கு உட்பட்டதாக அமையும். திறந்த ஆட்சேர்ப்பு முறையில் நியமனம் பெறும் உத்தியோகத்தர்கள் அத்தகைய பதவியில் உறுதிப்படுத்துவதற்கு முன்னர், விதித்துரைத்த முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சையில் சித்தி எய்துதல் வேண்டும்.

(iv) அரசாங்க சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படும் சகல உத்தியோகத்தர்களும் சேவையில் சேர்ந்துகொண்ட அரச கரும மொழிக்கு மேலாக மற்றைய அரச கரும மொழி தொடர்பில் தேர்ச்சியை, சேவையில் சேர்ந்து 03 வருடத்தினுள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

(v) நியமனம் பெறும் உத்தியோகத்தர்கள் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் பணிப்புரைக்கும், தாபன விதிக்கோவையின் ஒழுங்குவிதிகளுக்கும், நிதிப்பிரமாணத்திற்கும், அரசாங்கத்தால் அவ்வப்போது பிறப்பிக்கப்படுகின்ற பிரமாணங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் அமைச்சு மற்றும் திணைக்களம் என்பவற்றின் பணிப்புரைகளுக்கும் கட்டுப்படுதல் வேண்டும்.

4. **சம்பளத் திட்டம்**.- MN-3-2016- தொழில்நுட்ப உத்தியோகத்தர் III ரூபா 31,040.00 -10 × 445 - 11 × 660 - 10 × 730 - 10 × 750 - ரூபா 57,550.00. இச் சம்பளத் திட்டத்தில் ரூபா 31,040.00 - 10 × 445 - 10 × 780 - 10 × 750 - ரூபா 57,550.00 சம்பளப் படிமுறைகள் இத்தரத்திற்கு உரியதாகும். சம்பளம் வழங்கப்படுவது பொ. நி. சுற்றறிக்கை இலக்கம் 03/2016 இன் உப அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ளதற்கு அமையவாகும்.

வகுப்பு III இல் உள்ள உத்தியோகத்தர்கள் இயைபுடைய வேதன அளவுத் திட்டத்தின் மூன்றாம் வேதன அளவு நிலையை எய்துவதற்கு முன்னர் முதலாவது வினைத்திறன்காண் தடைத்தாண்டல் பரீட்சையிலும் சித்தியடைதல் வேண்டும்.

5. **வயதெல்லை**.-
ஆகக் குறைந்தது : 18 வயதிற்கு குறையாமல் இருக்க வேண்டும்.
ஆகக் கூடியது : 30 வயதிற்கு மேற்படாது இருத்தல் வேண்டும்.

6. **கல்வித் தகைமைகள்**.- சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் ஆறு (6) பாடங்களில் க. பொ. த. (சா. த.) ப் பரீட்சையில் ஒரே தடவையில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும் ;

அத்துடன்

பிரயோக கணிதம், தூய கணிதம், இரசாயனவியல், பௌதீகவியல், இணைந்த கணிதம் போன்ற பாடங்களில் இரண்டு பாடங்கள் உள்ளடக்கப்பட்டு விஞ்ஞான/கணித துறைக்குரிய பாடங்கள் மூன்றில் க. பொ. த. (உ. த.) பரீட்சையை ஒரே அமர்வில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும்.

**தொழிற் தகைமைகள்**.- மொறட்டுவை பல்கலைக்கழகத்தினால் அல்லது அம்பாறை ஹாடி நிறுவனத்தினால் வழங்கப்படுகின்ற தேசிய பொறியியல் (கட்டிடப் பொறியியல் துறையிலான) டிப்ளோமாவைப் பெற்றிருத்தல் ;

அல்லது

கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சினால் அங்கீகாரம் பெற்றுள்ள நிறுவனம் ஒன்றினால் வழங்கப்படுகின்ற உயர் தேசிய பொறியியல் (கட்டடப் பொறியியல் துறையிலான) டிப்ளோமாவைப் பெற்றிருத்தல் ;

அல்லது

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படுகின்ற தொழில்நுட்ப டிப்ளோமாவைப் பெற்றிருத்தல் ;

அல்லது

இலங்கை பொறியியல் நிறுவனத்தினால் நடாத்தப்படுகின்ற பொறியியல் பரீட்சையின் முதலாம் பகுதியை (கட்டடப் பொறியியல் துறையிலான) வெற்றிகரமாகப் பூரணப்படுத்தியிருத்தல் ;

அல்லது

உயர் கல்வி அமைச்சு மற்றும் மேற்குறிப்பிடப்பட்ட தொழில்நுட்ப சான்றிதழ்களை வழங்குகின்ற நிறுவனங்களிடம் வினவி கருத்துக்களைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் மேற்குறிப்பிடப்பட்ட தொழில்நுட்ப தகைமைகளுக்கு சகலவிதத்திலும் சமமானது என இலங்கை தொழில்நுட்ப சேவை ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏனைய தொழில்நுட்ப தகைமைகளைப் பெற்றிருத்தல்.

**உடற்தகைமை**.- பதவியில் கடமையை மேற்கொள்வதற்குப் போதிய உடல் மற்றும் உளத் தகைமையைக் கொண்டவராக இருப்பதுடன், உடற்றகுதி வைத்திய பரிசீலனைச் சான்றுகள் மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

**ஏனைய தகைமைகள் :**

(i) சகல விண்ணப்பதாரரும் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;
(ii) சகல விண்ணப்பதாரரும் சிறந்த குணவியல்பு உள்ளவராக இருத்தல் வேண்டும் ;
(iii) சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதன் பொருட்டு போட்டிப் பரீட்சைக்கு அமருவதன் பொருட்டு தேவையான தகைமைகளைக் கொண்டிருப்பது என ஏற்றுக்கொள்வது, விண்ணப்பதாரர் உரிய சகல தகைமைகள் மற்றும் உரிய வயதெல்லை என்பவற்றை விண்ணப்பங் கோரல் அறிவித்தலில் குறிப்பிடப்படும் இறுதித் திகதி அன்று சகலவிதத்திலும் தகைமைகளைப் பூர்த்திசெய்து இருந்தால் மாத்திரமேயாகும்.

7. **ஆட்சேர்ப்பு முறை**.- சகல ஆட்சேர்ப்புக்களும் உரிய சுற்றறிக்கைக்கு அமையவும் மற்றும் இலங்கை தொழில்நுட்ப சேவைப் பிரமாணத்திற்கு அமையவும் மேற்கொள்ளப்படும்.

திறந்த போட்டிப் பரீட்சையின் பொருட்டு உரிய சகல வினாப்பத்திரங்களிலும் 40% இனையோ அல்லது அதற்கு மேல் புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பகாரர் திறமை அடிப்படையில் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சையின்போது புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது. தகைமைகள் உறுதி செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் பரீட்சையின்போது பெற்றுக்கொள்ளப்பட்ட மொத்தப் புள்ளிகளின் திறமை அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படுவர்.

8. **பரீட்சை**.- இப்பரீட்சை எழுத்துமூலப் பரீட்சை வினாப்பத்திரங்கள் 2 இனைக் கொண்டமைந்ததாகும் :

| பாடங்கள் | நேரம் | உச்சப் புள்ளி அளவு | சித்தி எய்தும் புள்ளி |
|---|---|---|---|
| 1. மதிநுட்பப் பரீட்சை | 1 மணித்தியாலம் | 100 | 40 |
| 2. பொதுப் பரீட்சை (தொழில்நுட்ப மற்றும் விடயதான பரீட்சை) | 1 மணித்தியாலம் | 100 | 40 |

(i) இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் நடாத்தப்படும்.

(ii) விண்ணப்பதாரர் தான் விரும்பும் மொழி மூலத்தில் பரீட்சைக்குத் தோற்றலாம். பரீட்சையின் போது சகல வினாப்பத்திரங்களுக்கும் ஒரே மொழியில் விடையளிக்க வேண்டும்.

(iii) விண்ணப்பித்த மொழி மூலத்தை பரீட்சையின் போது எக்காரணம் கொண்டும் மாற்றம் செய்வதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

(iv) பரீட்சைக் கட்டணம் ரூபா 400.00 கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்தின் பெயரிற்கு வழங்கப்படுகின்ற பேராதனையில் அமைந்துள்ள தபால் கந்தோரில் மாற்றத்தக்கவாறு தீவின் எப்பாகத்திலும் அமையப்பெற்றுள்ள தபால் பணிமனையில் இருந்து பெற்றுக்கொள்ளப்படும் காசுக் கட்டளையை உரிய இடத்தில் ஒட்டி அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

(v) பாடத்திட்டம் :

(அ) **மதிநுட்பப் பரீட்சை** - (1 மணித்தியாலம் - மொத்தப் புள்ளிகள் 100).-
இதில் விண்ணப்பதாரர் தர்க்கரீதியாகச் சிந்திக்கும் ஆற்றல் அவரது சிந்தனையின் பகுப்பாய்வு அம்சங்கள், தீர்மானம் எடுக்கும் திறன், சீர்தூக்கிப் பார்க்கும் வல்லமை என்பன அடங்கலான வினாக்கள் உள்ளடக்கப்பட்டிருக்கும்.

(ஆ) **பொதுப் பரீட்சை**.- (தொழில்நுட்ப மற்றும் விடயதான பரீட்சை) - 1 மணித்தியாலம் - மொத்தப் புள்ளிகள் 100.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள பாட விடயங்களை உள்ளடக்கியதான வினாப்பத்திரம் :

(i) **அளவிடை மற்றும் சமப்படுத்துகை**.-
சங்கிலி நில அளக்கை (Chain Surveying), மட்ட அளக்கை (Leveling), தியோட்டலைட் பயன்பாடு தொடர்பான அறிவு, எளிய மேசை அளக்கை (Plain table survey) தொடர்பான அறிவு.

(ii) **கட்டடப் பொருள்**.-
சீமெந்து, சுண்ணாம்பு மண், கல், நிறப்பூச்சு வகை, வார்னிஸ் வகை, பிளாஸ்டிக் மற்றும் கண்ணாடி, கட்டடப் பொருட்களாகப் பயன்படுத்தப்படுகின்ற நல்ல நிலையில் உள்ள பலகை வகைகளை இனங்காணும் ஆற்றல்.

(iii) **கட்டட நிர்மாணம் மற்றும் மதிப்பீடு தயாரித்தல்**.-
அத்திவாரச் சுவர் கட்டல், பலகைக் கூரை, கூரையைத் தாங்கி நிற்கப் பயன்படும் இணைக்கப்பெற்ற உத்தரங்களின் ஆதாரக் கட்டுமானம் (Truss), முகடு, கொங்கிரீட் ஆதாரக் கட்டுமானம் (beams) மற்றும் கொங்கிரீட் முகடு/ அத்திவாரம்/ மட்டம் (levels)/கைப்பிடியுள்ள படிக்கட்டு (stair-case) போன்றன அமையப்பெறும் முறை மற்றும் அமையப்பெறும் சந்தர்ப்பங்கள்.

அளவிடையைப் பெற்றுக்கொள்ளல், மதிப்பீடுகளைத் தயாரித்தல், நிர்மாணங்கள் பொருட்டு தேவையான கட்டடப் பொருட்களின் அளவு மற்றும் ஊழியர் எண்ணிக்கை என்பவற்றை மதிப்பீடு செய்தல்.

(iv) கட்டமைப்பு (bending movements)/கருத்திட்ட அதிகார குறிப்பு.

(v) சேவைகள்.- மின்சாரம், நீர், மலசலகூட வசதிகள்.

9. **விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படும் முறை**.- இவ்வறிவித்தலுக்கு அமைவாக இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய 8 1/2" x 12" அளவிலான A4 கடதாசியில் இரு பக்கங்களையும் பிரயோகித்து தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 2021.04.16 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கத்தக்கவாறு "பணிப்பாளர் நாயகம், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம், த. பெ. இலக்கம் 13, கெடம்பே, பேராதனை" எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பத்தை உள்ளிட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "தொழில்நுட்ப உத்தியோகத்தர் III ஆம் தரத்தின் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சை" எனும் வாசகம் தெளிவாக எழுதப்படுதல் வேண்டும். விண்ணப்ப முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**குறிப்பு**.-

(i) அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரர் தமது விண்ணப்பங்களைத் திணைக்களத் தலைவரினூடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

(ii) சகல தேவைப்பாடுகளினையும் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தபாலிடுகையின்போது விண்ணப்பங்கள் காணாமல் போதல் அல்லது தாமதமாகி விடுதல் போன்ற எவ்வித முறைப்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(iii) விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. பரீட்சை நடாத்தப்படுகின்ற திகதி பத்திரிகை அறிவித்தல் மூலம் விளம்பரப்படுத்தப்படும். விண்ணப்பதாரருக்கு பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் பரீட்சை ஆரம்பிப்பதற்கு நான்கு நாட்களுக்கு முன்னர் கிடைக்கப்பெறாதவிடத்து பின்வரும் விபரங்களுடன் உடனடியாக கால்நடை உற்பத்தி சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகத்துடன் தொடர்புகொள்க :

(அ) விண்ணப்பதாரரது முழுப்பெயர் ;
(ஆ) முகவரி ;
(இ) விண்ணப்பம் தபாலிட்ட திகதி, பதிவு இலக்கம், தபாற் பணிமனை.

10. விண்ணப்பதாரர் பின்வரும் ஆவணங்களில் சான்றுப்படுத்தப்பட்ட நிழற்படப் பிரதிகளை (Photo copies) விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும் :

(i) பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் ;
(ii) கல்வித் தகைமைகளை/தொழிற் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்.

**விண்ணப்பதாரரது ஆளடையாளம்**.-

பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர் யாவரும் பரீட்சை நிலையத்தில் தமது ஆளடையாளத்தினை பரீட்சை நிலைய பொறுப்பதிகாரி திருப்தியுறும் வகையில் உறுதிப்படுத்துதல் வேண்டும். அதன் பொருட்டு பின்வருவன ஏற்றுக்கொள்ளப்படும் :

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை ;

(ஆ) ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய கடவுச்சீட்டு (பரீட்சைத் திகதிக்கு 3 வருடங்களுக்கு முன்னர் வழங்கப்பட்டு இருத்தல் வேண்டும்).

**பிழையான தகவல்களை வழங்குதல்**.- இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பதாரர் உரிய தகைமைகளைக் கொண்டிராமை கண்டுபிடிக்கப்பட்டால் பரீட்சைக்கு முன்னர், பரீட்சையின்போது அல்லது பரீட்சையின் பின்னர் எச்சந்தர்ப்பத்திலாயினும் அவருடைய விண்ணப்பத் தகைமையினை இரத்துச் செய்யப்பட இடமுண்டு. விண்ணப்பதாரர் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் ஏதாவது பிழையானது என தெரிந்திருந்தும் சமர்ப்பித்து இருப்பாராயின் அவர் சேவையில் நின்றும் நிறுத்தப்படுவதற்கு இடமுண்டு.

இவ்வர்த்தமான பத்திரிகையில் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடையதாகும் பொது நிபந்தனை மற்றும் பரீட்சார்த்தகர்களுக்கான விதிகள் அறிவுறுத்தல்கள்பால் உங்கள் கவனத்தை ஈர்ப்பதுடன் அவற்றினைப் பின்பற்றவும்.

11. இவ்வர்த்தமான அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களுக்கிடையே ஏதாவது வேறுபாடு காணப்படுமிடத்து சிங்கள மொழி மூலமே ஏற்புடையதாக அமையும்.

12. இவ்வர்த்தமான அறிவித்தலில் குறிப்பிடப்படாத ஏதாவது விடயம் தொடர்பில் பிரச்சினைகள் ஏற்படுமாயின் அது தொடர்பில் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் கால்நடை உற்பத்தி சுகாதார பணிப்பாளர் நாயகத்திற்கே உரியதாகும். அதுவே இறுதித் தீர்வாகும்.

டாக்டர் ஆர். ஹெட்டியாரச்சி,
பணிப்பாளர் நாயகம் ,
கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்.

கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்,
பேராதனை,
2021, பெப்புருவரி 25.

மாதிரி விண்ணப்பப்படிவம்

## கால்நடை வளங்கள், பண்ணைகள் மேம்பாடு, பால் மற்றும் முட்டை சார்ந்த கைத்தொழில் இராஜாங்க அமைச்சு

கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம்

## இலங்கை தொழில்நுட்ப சேவையின் III ஆம் தரத்திற்கு தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பம்

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்கு)

| | |
|---|---|
| பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் : | |

(உரிய இலக்கத்தை அடைப்பில் எழுதுக.)

சிங்களம் - 02
தமிழ் - 03
ஆங்கிலம் - 04

1. பெயர் :
   1.1 முதலெழுத்துக்கள் இறுதியில் வருமாறு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலத்தில்) :----.
   (உதாரணம் : SILVA, B.A.)
   1.2 முழுப்பெயர் (தமிழில்) :----.
   1.3 தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

2. முகவரி :
   2.1 தனிப்பட்ட :----.
   2.2 அலுவலக :----.
   2.3 தபால் முகவரி :----.
   2.4 தொடர்பு கொள்ள இயலுமான தொலைபேசி இலக்கம் :-

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கையடக்க : | | | | | | | | | | |
| இல்லத் தொலைபேசி : | | | | | | | | | | |

3. 3.1 பால் : (உரிய அடைப்பினுள் " ✓" அடையாளம் இடுக)

| | |
|---|---|
| ஆண் : | |
| பெண் : | |

3.2 பிறந்த திகதி :

ஆண்டு : [ | | | ] மாதம் : [ | ] திகதி : [ | ]

3.3 விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் முடிவுத் திகதியன்று வயது :

வருடங்கள் : [ | ] மாதங்கள் : [ | ] நாட்கள் : [ | ]

3.4 குடியியல் நிலை : (உரிய அடைப்பினை அடையாளம் இடுக)

விவாகமானவர் : [ ]
விவாகமாகாதவர் : [ ]

4. கல்வித் தகைமைகள் :

4.1 க. பொ. த. (உ./த.) பரீட்சை : வருடம் :----. மாதம் :----.

| பாடம் | பெற்றதரம் | சுட்டெண் |
|---|---|---|
| | | |

4.2 க. பொ. த. (சா./த.) ப் பரீட்சை : வருடம் :----. மாதம் :----.

| பாடம் | பெற்றதரம் | சுட்டெண் |
|---|---|---|
| | | |

4.3 (அ) தொழிற்றகைமை பெறப்பட்ட நிறுவனம் :----.
(ஆ) தொழிற்றகைமை பெறப்பட்ட வருடம் :----.

5. தற்போதைய தொழில் மற்றும் முன்னைய நியமனங்கள் (இருப்பின்) மாத்திரம் :

| பதவி | நிறுவனம் | முதல் | வரை |
|---|---|---|---|
| | | | |

6. பரீட்சைக் கட்டணம் செலுத்திய தபால் பணிமனையின் பெயர் :----.
காசுக்கட்டளை இலக்கம் :----.

பரீட்சைக் கட்டணமாக 400.00 ரூபாவை தீவின் எந்தவொரு தபால் அலுவலகத்திலும் செலுத்தி கால்நடை உற்பத்தி சுகாதார பணிப்பாளர் நாயகத்திற்கு மாற்றக்கூடிய பணிமனை, பேராதனை பற்றுச்சீட்டினை இங்கு ஒட்டவும்.

7. இவ்விண்ணப்பத்தில் என்னால் முன்வைக்கப்பட்ட விடயங்கள் உண்மையானதும் சரியானதும் என்பதை உறுதியுரைக்கின்றேன். இங்கு தரப்பட்டுள்ள விபரங்களில் ஏதாவது உண்மையற்றது அல்லது பிழையானது என நான் தெரிவு செய்வதற்கு முன் அறியப்படுமிடத்து நான் தகைமையற்றவனாகுவதுடன், தெரிவு செய்த பின்னர் அவ்வாறு தெரியப்படுமிடத்து எத்தகைய நட்டஈடும் வழங்கப்படாது சேவையில் இருந்து நீக்கப்படுவேன் என்பதை நான் அறிவேன்.

----
விண்ணப்பதாரரது கையொப்பம்.

திகதி :----.

(தற்போது அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு மாத்திரம்)

***திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :***

இத் திணைக்களத்தின் ................................................... கடமை மேற்கொள்கின்ற திரு./ திருமதி/ செல்வி .............. ............................................ என்பவரால் தரப்பட்டுள்ள விபரங்கள் பரீட்சிக்கப்பட்டது எனவும், அவை சரியானது எனவும், இவ்வுத்தியோகத்தர் மேற்குறிப்பிடப்பட்ட பதவியின் பொருட்டு தெரிவு செய்யப்படுமிடத்து அவர் தற்போது வகிக்கும் பதவியில் இருந்து விடுவிப்புச் செய்ய முடியும்/முடியாது எனவும் சான்றுப்படுத்துகின்றேன்.

----
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.
(அலுவலக முத்திரை).

தவிப் பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.
03-418

---

காணி அமைச்சு

**இலங்கை நிலஅளவைத் திணைக்களம்**

இலங்கை நிலஅளவைத் திணைக்களத்தில் வெற்றிடம் நிலவும் ஆரம்பமட்ட - பகுதி தேர்ச்சிபெற்ற சேவைத் தொகுதியில் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் – நில அளவைக் கள உதவியாளர்கள்

1.0 நிலஅளவைத் திணைக்களத்தில் வெற்றிடம் நிலவும் ஆரம்பமட்ட - பகுதி தேர்ச்சி பெற்ற சேவைத் தொகுதியில் (PL02) நில அளவைக் கள உதவியாளர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காகத் தகைமையுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1.1

| ஆட்சேர்ப்புக்கான பதவி | ஆட்சேர்ப்புத் தரம் |
|---|---|
| நிலஅளவைக்கள உதவியாளர் | தரம் III |

1.2 பதவிக்கான கடமைகளின் தன்மை

| பதவிப் பெயர் | முக்கிய அலுவல்கள் |
|---|---|
| நில அளவைக்கள உதவியாளர் | • அளவை தொடர்பான பருவரைபடம் கீற உதவுதல்.<br>• அளவைப்புலப் புத்தகங்கள் மற்றும் கிடைப்படங்களைப் பயன்படுத்தி பழைய எல்லைகளை அவதானிப்பதற்கு ஏதுவாக அளவைக் கோடுகளைத் தயாரித்தல்.<br>• அளவைதொடர்பான புலத்தில் முளைகளையும் எல்லைக் கற்களையும் திறந்து, நிறுவி அளவைக்காக தயார்படுத்தல்.<br>• நிலஅளவை தொடர்பான பீடக்குறிகளை இனங்காணவும் நிறுவவும் அளவையில் நிலஅளவையாளர்களுக்கு உதவுதல்.<br>• களத்தில் அளவைக்குப் பயன்படுத்தப்படும் உபகரணங்களைப் பேணவும், களஞ்சியப்படுத்தவும் உரிய பராமரிப்புப் பணிகளில் உதவுதல்.<br>• தியோடோலைட்டுக்கள், மட்டங்கள் மற்றும் புதிய இலத்திரனியல் பூரணமானிகள் அடங்கலாகச் செய்மதித் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட அளவைகளுக்குக் களத்தில் அளவைப்புள்ளிகளில் புவிசார் இடமறியும் முறைமை (GPS) உபகரணங்களை நிலைநாட்டல்.<br>• வான் ஒளிப்படப்பிடிப்பிற்கு தேவையான புவிபார்த்த பார்வைப்புள்ளிகளை அமைப்பது தொடர்பான சகல கடமைகளிலும் உதவுதல்.<br>• அளவைத்தரவுகளைச் சேகரிக்கவும் அளவைகளில் தெரிவுசெய்யப்பட்ட எல்லா இடங்களின் மையங்களையும் மட்டங்களையும் தீர்மானிப்பதற்குத் தேவையான இலக்குகளையும் அட்டவணைகளையும் முறையாகப் பேண உதவுதல்.<br>• அளவை நடவடிக்கைகளில் சரியான தரவுகளைப் பயன்படுத்தி களத்தில் எல்லைக் கற்களையும் பீடக்குறிகளையும் நிறுவுதல்.<br>• புலவேலைப் புத்தகம் மற்றும் சுவடு வரைதல்களையும் பயன்படுத்தி பூர்வாங்க நடவடிக்கையாக காணித்துண்டுகளின் எல்லைக் குறியீடுகளை நிர்ணயிக்க உதவுதல்<br>• நிலஅளவையாளர் நாயகம் அல்லது அவரது பிரதிநிதியினால் ஒப்படைக்கப்படும் நிலஅளவைதொடர்பான எந்தவொரு கடமையிலும் ஈடுபடுதல்.<br>• நிலஅளவை களஉதவியாளர் தரத்தில் ஓவசியர் பதவிவகிப்போருக்கு மேற்குறித்த கடமைகளுக்கு மேலதிகமாக ஏனைய நிலஅளவை கள உதவியாளரின் பணிகளை மேற்பார்வை செய்தலும் பொறுப்பாகும். |

2.0 நியமிக்கப்படுவோர் தொகையும், நியமனத்திகதியும் நியமிப்பு அதிகாரியினால் தீர்மானிக்கப்படும். வெற்றிடங்கள் அனைத்தையுமோ அல்லது அதில் ஏதேனுமொரு தொகையை நிரப்பாமலிருக்கவோ நியமிப்பு அதிகாரிக்கு அதிகாரம் உண்டு.

3.0 **சம்பளம்**.- இலக்கம் 03/ 2016 மற்றும் 2016.02.25 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்று நிருபத்திற்கு இணங்க நிலஅளவை வெளிக்கள உதவியாளர் சேவையின் III, II, I மற்றும் விசேட தரங்களுக்கான உரிய மாதாந்த சம்பளப் படிமுறை ரூபா 25,250 - 10 × 270 -10 × 300 - 10 × 330 - 12 × 350 - ரூபா 38,450 ஆகும்.

4.0 இந்தப் பதவி நிரந்தரமானது. இந்தப் பரீட்சையில் நிலஅளவை வெளிக்கள உதவியாளர் சேவையில் III தரத்திற்கு நியமிக்கப்படும் அலுவலருக்கு உரித்தான ஓய்வூதியம், ஓய்வூதிய முறைமை தொடர்பாக எதிர்காலத்தில் எடுக்கப்படும் தொழில்சார் தீர்மானங்களுக்கு இணங்க தீர்மானிக்கப்படும். இந்த நியமனம் மூன்று (03) வருடகால தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டிருப்பதுடன் தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரி நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவை ஆற்றுவதற்குத் தயாராக இருத்தல் வேண்டும். இந்த வர்த்தமானி அறிவித்தலில் ஆரம்பத்தில் உள்ள அரசாங்க சேவை நியமனங்களுக்கு உரியதான பொதுவான நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும்.

5.0 **தகைமைகள்** :-

5.1 **கல்வித் தகைமைகள்**

(அ) கல்விப் பொதுத்தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் குறைந்தது இரண்டு திறமைச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

5.2 **தொழில்சார் தகைமைகள்.-**
நில அளவைக் கள உதவியாளர் பதவிக்குரிய மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டுள்ளவாறு தேசிய தொழிற் பயிற்சித் தகைமையில் (NVQ) குறைந்த பட்சம் இரண்டாவது மட்டத்தில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

5.3 **ஆகக் குறைந்த நிபுணத்துவம்**
(அ) நில அளவைக் களத்தை இனங்காண உதவுதல்
(ஆ) அளவை உபகரணங்களையும், கருவிகளையும் பாதுகாத்தலும் பராமரித்தலும்

5.4 **உடல் சார் தகைமைகள்**
சகல விண்ணப்பதாரர்களும் இலங்கையின் எந்தப்பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும் இப்பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் தேவையான உடல், உள ரீதியான தகுதியைப் பெற்றிருத்தல் வேண்டும்.

5.5 **ஏனையவை**
I. ஓர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
II. விண்ணப்பதாரர் சிறந்த நடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.
III. பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காகத் தேவையான தகைமைகள் அனைத்தையும், விண்ணப்பம் கோரப்பட்டுள்ள இறுதித் திகதியன்று அனைத்து வழிகளிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

5.6 **வயது**
விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிப்பவர்களுக்கு இவ்வுயர் வயதெல்லை ஏற்புடையதல்ல)

6.0 **பிழையான தகவல்கள்.-** இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு யாதேனுமொரு விண்ணப்பதாரருக்கு தகைமை யில்லையெனத் தெரியவந்தால் பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சை நடைபெறும் பொழுதோ அல்லது பரீட்சைக்குப் பின்னரோ அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது விண்ணப்பம் இரத்துச் செய்யப்படலாம். சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட பின்னராயினும் விண்ணப்பதாரர் ஒருவர் சமர்ப்பித்துள்ள ஏதேனும் ஒரு தகவலை அது பிழையெனத் தெரிந்து கொண்டு சமர்ப்பித்திருந்தாலோ அல்லது ஏதேனும் தகவலை வேண்டுமென்றே மறைத்திருப்பது கண்டறியப்பட்டால் அவர் அரசாங்க சேவையில் இருந்து நீக்கப்படலாம்.

7.0 **ஆட்சேர்ப்பு முறை:** எழுத்துப்பரீட்சை மற்றும் தகைமைகளை பரிசீலனை செய்யும் நேர்முகப் பரீட்சை மூலம்.

**பரீட்சைப் பாடத்திட்டம்.-** இப் பரீட்சை இரண்டு பாடங்கள் கொண்டதோர் எழுத்து மூலப்பரீட்சை ஆகும். இப் பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் நடத்தப்படுவதுடன் விண்ணப்பித்த மொழி மூலத்தைப் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

| பாடம் | பெறக்கூடிய முழுப் புள்ளிகளின் அளவு | சித்தியெய்தப் பெற வேண்டிய ஆகக் குறைந்த புள்ளிகளின் வீதம் | காலம் |
|---|---|---|---|
| 1. பொது அறிவு | 100 | 40% | 2 மணித்தியாலம் |
| 2. நுண்ணறிவு | 100 | 40% | 1 மணித்தியாலமும் 15 நிமிடமும் |

7.1 **பாட விதானம்**
(i) **பொது அறிவு:** இவ் வினாத்தாள் விண்ணப்பதாரர் தாம் வதியும் சுற்றாடல் உட்பட இலங்கையின் அரசியல், சமூக, கலாசார, சமய, பொருளாதார பின்னணியுடன், விஞ்ஞான தொழில்நுட்ப அபிவிருத்தி மற்றும் சர்வதேச ரீதியாக முக்கியமான பொது விடயங்கள் தொடர்பாகப் பெற்றுள்ள அறிவைப் பரிசோதிப்பதாக அமையும்.

(ii) **நுண்ணறிவு:** இது விண்ணப்பதாரரின் சிந்திக்கும் ஆற்றல், அலசி ஆராயும் தன்மை, சமயோசிதமாக தீர்மானமெடுக்கும் திறமை போன்றவற்றை அளவிடும் பல் தேர்வு வினாக்களை உள்ளடக்கிய ஒரு வினாத்தாளாகும்.

*8.0* **தெரிவு முறை**.-

*8.1* நில அளவையாளர் நாயகத்தினால் நியமிக்கப்படும் நேர்முகப்பரீட்சைச் சபையினால் விண்ணப்பதாரர்களின் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களை பரிசீலனை செய்யும் பொருட்டு மட்டும் நேர்முகப்பரீட்சை நடத்தப்பட்டு, பின்னர் எழுத்துப்பரீட்சையில் விண்ணப்பதாரர்கள் பெற்ற புள்ளிகளின் திறமையின் ஒழுங்கில் மட்டும் தரம் III இற்கான நில அளவைக் கள உதவியாளர்களாக ஆட்சேர்ப்பு செய்யப்படுபவர்.

வெற்றிடங்களின் எண்ணிக்கையின்படி நில அளவையாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும் விண்ணப்ப தாரர்களின் தகைமைகளை பரிசீலனை செய்யும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

சேர்த்துக் கொள்ளப்படும் நில அளவைக் கள உதவியாளர்களுக்கு ஒரு மாத கால கள மற்றும் கோட்பாட்டுப் பயிற்சி நில அளவைத் திணைக்கள பயிற்சி நிறுவனத்தால் வழங்கப்படும்.

*9.0* **விண்ணப்பப் படிவங்களை தயாரித்தலும் சமர்ப்பித்தலும்**.-

(அ) இவ் அறிவித்தலின் முடிவில் காணப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப 21x29cm (A4) அளவுத்தாளில் இரு பக்கங்களையும் பாவித்து விண்ணப்பதாரர்கள் தாமாகவே விண்ணப்பப்படிவங்களைத் தயாரித்துக் கொள்ள வேண்டும். இல. 1.0 முதல் 4.0 வரையான தலைப்புக்கள் முதலாம் பக்கத்திலும் இல. 5.0 முதல் இல. 9.0 வரையான தலைப்புக்கள் இரண்டாம் பக்கத்திலும் இல 10.0 முதல் 12.2 வரையான தலைப்புக்கள் மூன்றாம் பக்கத்திலும் உள்ளடங்கும் வகையில் விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்படல் வேண்டும்.

(ஆ) தற்போது அரசாங்க மற்றும் மாகாண அரசாங்க சேவையின் கீழ் பணியாற்றும் விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை தமது திணைக்களத் தலைவர்கள் ஊடாகவும், அரசகூட்டுத்தாபனங்கள் மற்றும் உள்ளூராட்சி சபைகளின் கீழ் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் அவற்றை தமது நிறுவனங்களின் தலைவர்கள் ஊடாகவும் உரிய தினத்திற்கு முன்னர் சமர்ப்பித்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பப்படிவங்கள் தாம் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலத்திலேயே தயாரிக்கப்படல் வேண்டும்.

(ஈ) உரிய மாதிரி விண்ணப்பத்திற்கு அமைவாக இல்லாத உரிய தினத்திற்கு முன் பரீட்சைக்கட்டணம் செலுத்தப்படாத மற்றும் சரியாகப் பூர்த்தி செய்யப்படாமல் குறைபாடுகளுடன் கூடிய விண்ணப்பங்கள் யாவும் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். உரிய முறையில் விண்ணப்பங்களை நிரப்பாமையினால் நிகழும் பிரதிபலன்களை விண்ணப்பதாரர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப்பிரதியொன்றை தம்மிடம் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவம் பரீட்சை அறிவித்தலுடன் காணப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்துடன் ஒத்திருக்கிறதா என விண்ணப்பதாரர் பரிசீலித்தல் வேண்டும். இல்லையேல் விண்ணப்பம் நிராகரிக்கப் படலாம்.

(உ) விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. தபாலில் காணாமல் போகும் விண்ணப்பங்கள் தொடர்பில் செய்யப்படும் எதுவித முறைப்பாடும் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

*9.1* விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் முடிவுத்திகதிக்கு வர்த்தமானி அறிவித்தலின்படி 05 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் பூரணப்படுத்தியவர்கள் மாத்திரமே விண்ணப்பிக்கலாம். பரீட்சைக்கட்டணத்தைச் செலுத்தி 2021.04.05 அன்றோ அத்தினத்திற்கு முன்னரோ விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ள விண்ணப்ப தாரர்களுக்கும் போட்டிப் பரீட்சைக்குத் தோற்ற நில அளவையாளர் நாயகத்தினால் இடமளிக்கப்படும். போட்டிப் பரீட்சைக்குத் தோற்ற அனுமதியட்டை வழங்கப்படுவது விண்ணப்பதாரர் இப் பரீட்சைக்குத் தோற்றவோ அல்லது இப் பதவிக்கான தகைமையுள்ளவர் என ஏற்றுக் கொள்ளப்பட்டதாகவோ கருதப்படக்கூடாது.

*9.2* விண்ணப்பப்படிவம் அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "ஆரம்ப மட்டப் பகுதித் தேர்ச்சி பெற்ற சேவைத் தொகுதியின் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு - நில அளவைக் கள உதவியாளர்" எனத்தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

*9.3* விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரரின் கையொப்பம் அரசாங்கப் பாடசாலையொன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், நொத்தாரிசு, முப்படைகளிலும் ஆணையிடும் தரத்திலுள்ள அதிகாரிகள், பொலிஸ்சேவையில் வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ள ஒரு பதவியைக் கொண்டுள்ள உத்தியோகத்தர், அல்லது அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல: 03/2016 இன் தரப்படுத்தலுக்கு அமைய மூன்றாம் நிலை அல்லது சிரேஷ்ட மட்டங்களில் உள்ள ஒரு நிரந்தர அரசாங்க உத்தியோகத்தர் ஆகியோரில் எவரேனும் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

10. **பரீட்சைக் கட்டணம்** .- பரீட்சைக் கட்டணம் ரூபா 800.00 ஆகும். இத்தொகையைக் கொழும்பு- 05, கிருல வீதி, இல. 150 இல் அமைந்துள்ள நில அளவைத் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்திலுள்ள காசாளர் பிரிவில் அல்லது எந்தவொரு மாவட்ட நிலஅளவை அலுவலகத்திலோ அல்லது தியத்தலாவை அளவையியல் படமாக்கல் நிறுவனத்தில் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப் படிவத்தில் அதற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் கழறாதவாறு ஒட்டுதல் வேண்டும் (பற்றுச்சீட்டின் நிழற்படப்பிரதியொன்றினை எதிர்காலத் தேவைக்காக தன்வசம் வைத்திருத்தல் வேண்டும்). எக்காரணம் கொண்டும் பரீட்சைக்கட்டணம் மீளச்செலுத்தப்பட மாட்டாது என்பதுடன் காசுக்கட்டளை அல்லது காசோலை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பற்றுச்சீட்டு இன்றி சமர்ப்பிக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

11. **விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல்**.- பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2021.04.05 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கீழ்வரும் முகவரிக்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.

சிரேஷ்ட நிலஅளவை அத்தியட்சகர் (பரீட்சை),
நில அளவைத்திணைக்களம்,
கொழும்பு - 05.

12. **பரீட்சைக்குத் தோற்றுதல்**.- பரீட்சைக்குத் தோற்றும் ஒரு பரீட்சார்த்தி அப்பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் தமது அனுமதி அட்டையைச் சமர்ப்பித்தல் வேண்டும். தமது அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்கத்தவறும் பரீட்சார்த்திக்கு பரீட்சைக்குத் தோற்ற அனுமதியளிக்கப்படமாட்டாது. ஒரு பரீட்சார்த்தி தமக்கென குறித்தொதுக்கப்பட்ட பரீட்சை நிலையத்திலேயே பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

13. **பரீட்சார்த்தியின் ஆளடையாளம்**.- பரீட்சை மண்டபத்தில் தாம் தோற்றும் ஒவ்வொரு விண்ணப்பப்பத்திரம் தொடர்பாகவும் பரீட்சை மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் பரீட்சார்த்திகள் தமது ஆள் அடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். இதற்கென பின்வரும் ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

I. ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள செல்லுபடியாகும் தேசிய ஆள் அடையாள அட்டை ;
II. தபால் மா அதிபரினால் வழங்கப்பட்ட செல்லுபடியான அஞ்சல் அடையாள அட்டை ;
III. செல்லுபடியான கடவுச்சீட்டு;
IV. செல்லுபடியான வாகன அனுமதிப் பத்திரம்.

14. இங்கு குறிப்பிடப்படாத ஏதேனுமொரு விடயமிருப்பின் அது குறித்து நில அளவையாளர் நாயகத்தின் சுற்றறிக்கைப்பிரகாரம் தீர்மானிக்கப்படும். சகல விண்ணப்பதாரர்களும் இவ்வர்த்தமானியில் காணப்படும் பொதுவான பரீட்சை விதிமுறைகளுக்கு அமைவாக நடந்துகொள்ளக் கட்டுப்பட்டுள்ளனர்.

15. மேற்கூறப்பட்டுள்ள பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக 2140 ஆம் இலக்க மற்றும் 2019.09.06 ஆந் திகதிய வர்த்தமானி அறிவிப்பின்படி விண்ணப்பங்கள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டு பரீட்சை அனுமதிப்பத்திரங்கள் கிடைக்கப்பெற்ற விண்ணப்பதாரிகள், மீண்டும் விண்ணப்பங்கள் சமர்ப்பித்தல் அவசியமல்ல. ஆனால், வர்த்தமானி அறிவித்தலின் 5.6 இலக்கத்திற்கமைவான தகுதிகளை பூரணப்படுத்தியிருத்தல் அவசியமாகும். மேலும், பரீட்சை அனுமதிப்பத்திரம் கிடைக்கபெற்று ஆனால் தற்சமயம் அவை இல்லாவிடில் அந்த விண்ணப்பதாரிகள் இதற்காக மீண்டும் பரீட்சை கட்டணங்களை செலுத்தி விண்ணப்பித்தல் அவசியம் என்பதையும் அறியத்தருகின்றேன்.

ஏ. எல். ஷாமளி சித்திரலேகா பெரேரா,
நில அளவையாளர் நாயகம்.

நில அளவையாளர் நாயக அலுவலகம்,
கொழும்பு - 05,
2021, மாச்சு 10.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை நிலஅளவைத் திணைக்களத்தில் வெற்றிடம் நிலவும் ஆரம்பமட்ட- பகுதித்தேர்ச்சிபெற்ற சேவைத் தொகுதியில் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் - நில அளவைக் கள உதவியாளர்கள்**

☐
(அலுவலகப் பயன்பாட்டுக்கு மாத்திரம்)

பரீட்சைக்கு தோற்றுகின்ற மொழிமூலம் :- ☐
சிங்களம் - 1
தமிழ் - 2
ஆங்கிலம் - 3
(தரப்பட்ட கூட்டினுள் இலக்கத்தை இடவும்)

1.0 1.1 முதலெழுத்துக்களுடன் பெயர்: (முதலெழுத்துக்களை ஆங்கில பெரிய எழுத்துக்களில் பெயரின் இறுதியில்)
உதா : PERERA A. B. C.
.....................................................................................................

1.2 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) ..........................................................
.....................................................................................................

1.3 முழுப்பெயர் (தமிழில் அல்லது சிங்களத்தில்) ..........................................................
.....................................................................................................

1.4 தேசிய ஆள் அடையாளஅட்டை இல. : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

1.5 பிறந்த திகதி:
ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

1.6 விண்ணப்ப முடிவுத் திகதியன்று வயது:

வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

1.7 பால் :- (ஆண்-M, பெண்-F) ☐

1.8 குடியியல் நிலை : திருமணமானவர் : ☐ திருமணமாகாதவர் : ☐

2.0 நிரந்தர முகவரி :

2.1 ஆங்கில பெரிய எழுத்துக்களில் : ..........................................................
.....................................................................................................

2.2 சிங்களத்தில்/தமிழில் : ..........................................................
.....................................................................................................

2.3 அனுமதிபத்திரங்களை அனுப்ப வேண்டிய முகவரி : ..........................................................
.....................................................................................................

3.0 3.1 முகவரி கொடுக்கப்பட்ட நிர்வாக மாவட்டம் (அட்டவணை 1ஐப் பார்க்கவும்)

மாவட்ட இலக்கம் : ☐ மாவட்டத்தின் பெயர் : ☐

3.2 எப்போதிலிருந்து அம் மாவட்டத்தில் வசிக்கின்றீர்கள்?..............................................

4.0 தொலைபேசி இலக்கம்

நிரந்தரம் : ☐☐☐☐☐☐☐☐☐☐ கையடக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐

5.0 கல்வித் தகைமைகள்: க.பொ.த (சா.த) பரீட்சை பற்றிய விபரங்கள்:-
(சான்றிதழ்களின் பிரதிகளை சேர்த்து அனுப்புதல் வேண்டும்.)

5.1 முதலாவது அமர்வு:-

பரீட்சைக்கு தோற்றிய ஆண்டும் மாதமும்:............................. சுட்டிலக்கம்:......................
சித்தியெய்திய பாடங்கள்:.........................

| பாடங்கள் | தரம் | பாடங்கள் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 5. | |
| 2. | | 6. | |
| 3. | | 7. | |
| 4. | | 8. | |

5.2 இரண்டாவது அமர்வு:
பரீட்சைக்கு தோற்றிய ஆண்டும் மாதமும்:............................. சுட்டிலக்கம்:......................
சித்தியெய்திய பாடங்கள்:.........................

| பாடங்கள் | தரம் | பாடங்கள் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 5. | |
| 2. | | 6. | |
| 3. | | 7. | |
| 4. | | 8. | |

6.0 தொழில்சார் தகைமைகள்:- நிலஅளவை கள உதவியாளர் பதவிக்குரிய, பெற்றுள்ள NVQ தகைமைகள் பற்றிய விபரங்களைக் குறிப்பிடவும்.)
(துறைசார் சான்றிதழ்களின் சான்றுபடுத்தப்பட்ட பிரதிகளை அனுப்புதல் அவசியம்)
.............................................................................................................................................

7.0 ஏனைய தகைமைகள் ..........................................................................................................

8.0 குற்றச் செயலொன்றுக்கு எப்போதாவது நீதிமன்றத்தினால் குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளீரா?

ஆம் ☐ இல்லை ☐

8.1 ஆம் எனின், அக்குற்றம் பற்றிய விபரங்களைத் தருக? ..........................................................................................

9. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு பற்றிய விபரங்கள்:-

i. பரீட்சைக்கட்டணம் செலுத்திய அலுவலகம் :.........................................................
ii. பற்றுச்சீட்டு இலக்கமும் திகதியும்:...................................................................
iii. செலுத்திய தொகை:......................................................................................

| |
|---|
| பற்றுச்சீட்டை கழறாதவாறு இங்கே ஒட்டவும். |

10.0 விண்ணப்பதாரரின் உறுதியுரை

அ. இவ் விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் எனது அறிவிற்கு எட்டிய வரையில் உண்மையானதும், சரியானதும் என்று நான் இத்தால் உறுதிமொழிகின்றேன்.

ஆ. என்னால் செய்யப்பட்டுள்ள இப் பிரகடனம் பொய்யானதென உறுதியாகுமிடத்து நான் சேவையில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்குத் தகுதியற்றவனாவேன் என்றும் நியமனம் பெற்றபின் அவ்வாறு உறுதியாகுமிடத்து சேவையிலிருந்து நீக்கம் செய்யப்படுவதற்கு ஆளாவேன் என்றும் நான் அறிவேன்.

இ. ரூபா ................ செலுத்திப் பெற்ற பற்றுச் சீட்டு உரிய இடத்தில் ஒட்டப்பட்டுள்ளது.

ஈ. மேலும் பரீட்சை நடத்துதல் தொடர்பான நிலஅளவையாளர் நாயகத்தின் விதிகளுக்கும் சட்ட ஒழுங்குகளுக்கும் கட்டுப்படுவதாகவும் உறுதிப்படுத்துகிறேன்.

உ. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு விபரத்தையும் பின்னர் மாற்றமாட்டேன்.

.............................. .....................................

திகதி விண்ணப்பதாரரின் கையொப்பம்.

11.0 விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல்

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ............................................................................ என்பவரை நான் தனிப்பட்ட ரீதியில் நன்கு அறிவேன் எனவும், அவர் ................................. ஆந் திகதி என் முன்னிலையில் மேலே 10.0 ஆம் பந்தியின் கீழ் ஒப்பமிட்டார் எனவும் உறுதி செய்கின்றேன்.

.............................. .....................................

திகதி உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்

உறுதிப்படுத்துபவரின் பெயர்:..................................
பதவிப் பெயர்:..........................................
முகவரி:..................................................
(பதவி முத்திரையால் சான்றுப்படுத்தவும்)

12.0 திணைக்களத் தலைவரின் பரிந்துரை:
(அரசாங்க/மாகாண அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம்)

12.1 உத்தியோகத்தரின் சுயவிபரக் கோவைக்கமைய விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் அண்மித்த ஐந்து ஆண்டுகளுக்குள், வேலை, நடத்தை, வரவு திருப்தியானது/திருப்தியற்றது. சகல சம்பள ஏற்றங்களையும் உழைத்துள்ளார்/ இல்லை. எந்தவோர் ஒழுக்காற்றுத் தண்டனைகளுக்கும் உள்ளாகவில்லை/ உள்ளாகியுள்ளார்.

12.2 விண்ணப்பிப்பவர் இந்த பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டால் சேவையிலிருந்து விடுவிக்கப்பட முடியும் /விடுவிக்கப் படமுடியாது.

திகதி :......................... ...............................................

திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பதவி முத்திரை

**அட்டவணை 1**

மாதிரி விண்ணப்பப்படிவத்தில் தலைப்பு இல 03.1 இல் குறிக்கப்படும் முகவரி உரித்தாகும் நிர்வாக மாவட்டம் தொடர்பில் இவ் அட்டவணை தொடர்புடையது.

| நகரங்கள்/மாவட்டங்களின் பெயர் | நகரங்கள்/மாவட்டங்களின் இலக்கங்கள் |
|---|---|
| 1. கொழும்பு | 01 |
| 2. கம்பஹா | 02 |
| 3. களுத்துறை | 03 |
| 4. கண்டி | 04 |
| 5. மாத்தளை | 05 |
| 6. நுவரெலியா | 06 |
| 7. காலி | 07 |
| 8. மாத்தறை | 08 |
| 9. அம்பாந்தோட்டை | 09 |
| 10. குருநாகல் | 10 |
| 11. புத்தளம் | 11 |
| 12. அநுராதபுரம் | 12 |
| 13. பொலன்னறுவை | 13 |
| 14. பதுளை | 14 |
| 15. மொனராகலை | 15 |
| 16. இரத்தினபுரி | 16 |
| 17. கேகாலை | 17 |
| 18. அம்பாறை | 18 |
| 19. மட்டக்களப்பு | 19 |
| 20. திருகோணமலை | 20 |
| 21. யாழ்ப்பாணம் | 21 |
| 22. வவுனியா | 22 |

03-723